**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**O.S.No: 110/2011** **தேதி: 02.02.2026**

**வா.சா.1 – பாத்திமாபீவி**

**2–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

இந்த வழக்கின் சொத்து அப்துல் ரசாக் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அப்துல் ரசாக்கிற்கு, அப்துல்லா, இப்ராம்அலி, முகமது ரபீக் என்ற மூன்று ஆண்கள் மற்றும் பரிதாபீவி என்ற ஒரு பெண்ணும் உள்ளனர் என்றால் சரிதான். அப்துல்லாவின் மனைவி என்ற ஸ்தானத்திலிருந்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அப்துல்லாவை நான் திருமணம் செய்வதற்கு முன்பு அப்துல்ரசாக் என்ற நபரை நான் திருமணம் செய்திருந்தேன் என்றால் சரிதான். அவருக்கு வாய்பேசமுடியாது என்றால் சரிதான். அவர் மூலமாக எனக்கு சம்சுதீன் என்ற மகன் பிறந்தார் என்றால் சரிதான். எனக்கும், அப்துல்ரசாக்கிற்கும் சட்டப்படி விவாகரத்து எதுவும் நடந்ததா என்றால் ஜமாத் மூலம் விவாகரத்து நடந்தது. எந்த வருடம், எந்த தேதியில் அவ்வாறு விவாகரத்து நடந்தது என்றால் தேதி சரியாக ஞாபகம் இல்லை, ஆனால் எனது மகன் பிறந்து 3 வயது இருக்கும் போது விவாகரத்து நடைபெற்றது. மேற்படி விவாகரத்தானது வாய்மொழியான விவாகரத்தா அல்லது எழுத்துப் பூர்வாமான விவாகரத்தா என்றால் எழுத்துப்பூர்வமான விவாகரத்து ஆகும். இஸ்லாமிய சட்டப்படி முத்தலாக் என்பது ஒரே நாளில் சொல்ல முடியாது என்றால் சரிதான். எனக்கு முதல், இரண்டு மற்றும் மூன்றாவது தலாக் எந்த தேதியில் சொல்லப்பட்டது என்றால் எனக்கு தேதி ஞாபகம் இல்லை. எனக்கு நடைபெற்ற எழுத்துப்பூர்வமான தலாக்கை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தலாக் சொல்லப்பட்ட பின்னர் மூன்று மாத காலம் இத்தா காலம் என்றும், அந்த இத்தா காலம் எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரை என்று சொன்னால் எனக்கு தேதி ஞாபகம் இல்லை. மேற்படி இத்தா

காலத்தில் எனது முதல் கணவர் எனக்கு எவ்வளவு பணம் கொடுத்தார் என்ற வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எனது முதல் கணவர் அப்துல் ரசாக்கை விவாகரத்து செய்யாமல் நாங்கள் பிரிந்து இருந்த சமயத்தில் தான் நான் அப்துல்லாவை இரண்டாவதாக திருமணம் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால் நானும், அப்துல்லாவும் செய்து கொண்ட திருமணம் இஸ்லாமிய சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. திருமணத்திற்கு பின்னர் எனது மாமனாரான அப்துல் ரசாக் மீது 2004–ம் ஆண்டில் அனைத்து மகளீர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்று சொன்னால் எனது மாமனார் எனக்கு சரியாக சாப்பாட்டிற்கு பணம் கொடுக்கவில்லை, மேலும், அவரது மகன் இப்ராஹிம் அலி என்னிடம் தகாத முறையில் நடக்க முயன்ற போது, எனது அக்காவை அழைத்து சென்று அதைப் பற்றி கேட்ட போது எனது மாமனார் எனது அக்காவின் நெஞ்சில் கை வைத்து சட்டையைப் பிடித்து அடித்தார், அதனால் நான் காவல் நிலையத்தில் இப்ராஹிம் அலி மீது புகார் கொடுத்தேன். ஆனால் எனது மாமனார் அந்த புகாருக்கு பதில் சொன்னார். இந்த வழக்கின் பிரதிவாதிகள் மீது நான் ஒரு குற்ற வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி குற்ற வழக்கில் எனது மாமனார் மீது 2004–ம் ஆண்டில் புகார் கொடுத்ததாக ஒப்புக் கொண்டு சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். எனது கணவர் அப்துல்லா B.Com வரை படித்துள்ளார் என்றால், அவர் படித்துள்ளார், என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது. எனது கணவர் அப்துல்லா, என்னை திருமணம் செய்த காலகட்டத்தில் மதுப் பழக்கத்திற்கும், போதை பழக்கத்திற்கும் அடிமையாக இருந்தார் என்றால், மதுப்பழக்கம் கிடையாது, போதை பழக்கத்திற்கு அடிமையாக இருந்தார். எனது கணவர் போதை பழக்கத்திற்கு அடிமையாகி, எந்த வேலைக்கும் செல்லாத காரணத்தினால், எனது மாமனார் எனக்கு வீட்டிற்கு தேவையான பணம் கொடுத்து உதவினார் என்றால் சரிதான். 2004–ல் நான், எனது கணவரை சரிவர பராமரிக்காததால் தான், எனது மாமனார் எனக்கு பணம்

கொடுப்பதை நிறுத்தினார் என்றும், அதனால் தான் நான் எனது மாமனார் மீது 2004–ல் புகார் கொடுத்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் தற்போது 1–ம் பிரதிவாதியின் மீது உள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாக உண்மையை திரித்து தவறாக 2004–ல் புகார் கொடுத்தேன் என்று சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 2005–ம் ஆண்டிலிருந்து நான் எனது கணவரை பராமரிக்காமல் விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. நான் எனது கணவரை பராமரிக்காதத காரணத்தினால், எனது கணவரை, எனது மாமனார் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பாலகங்கா சரணாலயத்தில் சேர்த்து, அதற்கான பராமரிப்புத் தொகையை எனது மாமனார் செலுத்தி வந்தார் என்றால் சரிதான். எனக்கு வசதி இல்லாததால் நான் பராமரிக்கவில்லை. எனது கணவர் வெளியே சென்று மற்றவர்களிடம் பீடிக்கு பணம் கேட்பார், அது எனது மாமனாருக்கு அசிங்கமாக இருந்ததால், எனது கணவரை எனது மாமனார் திருநெல்வேலி பாலகங்கா சரணாலயத்தில் சேர்த்தார். நான் சொன்ன மேற்கண்ட சங்கதி பொய் என்றும், தற்போது நான் கற்பனையாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் முழுவதும் எனது மாமனார் அப்துல் ரசாக்கிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். இஸ்லாமிய சட்டப்படி எனது மாமனாருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவர் வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ யாருக்கு வேண்டுமானாலும் நன்கொடையாக கொடுக்க உரிமை உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நல்லூர் முஸ்லீம் வடக்கு தெருவில் ரசாக் காம்பவுண்டில் மொத்தம் 16 வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அதில் ஒரு வீட்டில் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். அதில் இரண்டு வீடுகளில் இப்ராஹிம் அலி குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல, மூன்று வீடுகளில் குடியிருந்து வருகிறார். மூன்று வீடுகளையும், ஒரே வீடாக்கி அனுபவம் செய்து வருகிறார். மீதமுள்ள வீடுகளை எனது மாமனார் அப்துல் ரசாக் காலத்தில் வாடகைக்கு விடப்பட்டிருந்தது என்று சொன்னால், எனது வீட்டைத் தவிர மற்ற அனைத்து வீடுகளும் வாடகைக்குத்தான் விடப்பட்டிருந்தது.

இப்ராஹிம் அலியின் வீடும் வேறொரு நபருக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது. எனது மாமனார் இறப்பிற்கு பின்பு தான் இப்ராஹிம் அலி அந்த வீட்டிற்கு குடி வந்தார். இந்த வழக்கின் 1–ம் பிரதிவாதிக்கு எனது மாமனார் அப்துல் ரசாக் அவர்கள் 09.03.2006–ல் நன்கொடை பத்திரம் எழுதிக் கொடுத்து, அதன் பின்னர் 1–ம் பிரதிவாதி அவரது மனைவியான பரிதாவிற்கு நன்கொடை பத்திரம் எழுதியதாக கட்சி செய்து வருகிறார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பரிதாவிடமிருந்து, சிக்கந்தர் பாதுஷா என்பவர் 20.01.2011–ல் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சிக்கந்தர் பாதுஷா கிரையம் வாங்கிய பகுதியில் தான் நான் குடியிருந்து வரும் வீட்டை காலி செய்யச் சொன்னதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல, அதற்கு முன்பே நான் இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டேன். வீட்டை வாங்கப்போவதாக என்னை 2009–ல் அழைத்து சிக்கந்தர் பாதுஷாவின் அம்மா மற்றும் அவரது சித்தப்பாவும் பேசினார். ஆனால் நான் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. நான் இந்த வழக்கை 2011–ம் வருடம் எந்த மாதத்தில் தாக்கல் செய்தேன் என்றால் 6 வது மாதம் என்று நினைக்கிறேன். 2011 ஆகஸ்ட் மாதத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் இந்த வழக்கை சிக்கந்தர் பாதுஷா கிரையம் வாங்கிய பின்னர் தான் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எனது மாமனார் இறந்த பின்னர் அப்துல் ரசாக் காம்பவுண்டில் உள்ள அனைத்து வீடுகளின் வாடகையையும், இப்ராஹிம் அலி தான் வாங்கி வந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது மாமியார் தான் வாங்கி வந்தார். எனது மாமியார் வாடகை வாங்கியதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது மாமியார் 2017–ல் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். எனது மாமியார் காலமான பின்னர் தற்போது வரை இப்ராஹிம் அலி தான் வாடகை வசூலித்து வருகிறார் என்றால் சரிதான். தாவா 16 வது லக்க சொத்தில் உள்ள ஆறு கடைகள் யார் யாருக்கு வாடகைக்கு விடப்பட்டு, யார் வாடகை வசூலித்து வருகிறார் என்றால்,

எனது மாமனார் இருந்த வரை அவர்தான் வாடகை வசூல் செய்து வந்தார். எனது மாமனார் இருந்த வரை அவர்தான் வாடகை வசூல் செய்து வந்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது மாமனார் அப்துல் ரசாக் அவர்கள் 07.05.2008-ல் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். இந்த வழக்கில் 1, 2 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் படித்துப் பார்த்துள்ளேன். 2-ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையில் அவரது தகப்பனாரான அப்துல் ரசாக் அவர்கள் 13.03.2006-ல் வாய்மொழி நன்கொடை கொடுத்ததாக கட்சி செய்து வருகிறார் என்றால் சரிதான். ஆனால் அது போல் வாய்மொழி நன்கொடை கொடுக்கவில்லை. 16-வது லக்க சொத்தைப் பொறுத்து சான்றிட்ட நகல் எடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன், அது வா.சா.ஆ.25 மற்றும் வா.சா.ஆ.26 என்றால் சரிதான். மேற்படி இரண்டு ஆவணங்களையும் நான் படித்துப் பார்த்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.25-ல் எனக்கு கடந்த 13.03.2006 தேதியில் ஹிபா என்னும் வாய்மொழி தானம் (இஸ்லாமிய மார்க்க ஷரியத் சட்டப்படி) உறுதிப் பத்திரம் நோட்ரி பப்ளிக் மூலம் எழுதிக் கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், ஆனால் அந்த சமயத்தில் முகமது ரபீக் ஊரில் இல்லை. அந்த சமயத்தில் அவர் வெளிநாட்டில் இருந்தார். அந்த சமயத்தில் முகமது ரபீக் ஊரில் இல்லை என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 16 வது லக்க வீட்டில் முகமது ரபீக் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். 16 வது லக்கத்தில் உள்ள ஆறு கடைகளின் வாடகையையும் முகமது ரபீக் தான் வாங்கி வருகிறார் என்றால் சரிதான். எனது கணவரின் உடன்பிறந்த சகோதரி பரிதாபீவி அவர்கள் 20.12.2007-ல் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் பரிதாபீவி ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு இறந்ததாக சொல்வது சரிதான். எனது மாமனார் இறப்பிற்கு முன்பாக ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். இஸ்லாமியச் சட்டப்படி சொத்திற்கு உரிமையான நபர் இறக்கும் சமயத்தில்,

உயிருடன் இருக்கும் நேரடி வாரிசிற்கு மட்டும் தான் சொத்தில் உரிமை உண்டு என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அதனால் இந்த வழக்கிற்கு 4, 5 பிரதிவாதிகள் தேவையற்ற நபர்கள் என்று சொன்னால் சரியல்ல. 16–வது லக்க சொத்திற்கு வீட்டு தீர்வை ரசீது, மின் கட்டணம், நகராட்சிக்கு செலுத்த வேண்டிய இதர கட்டணங்கள் அனைத்தையும் 2–ம் பிரதிவாதி முகமது ரபீக் தான் செலுத்தி வருகிறார் என்றால், எனது மாமியார் உயிருடன் இருந்த வரை அவர் தான் செலுத்தி வந்தார். எனது மாமியார் உயிருடன் இருந்த வரை அவர் தான் செலுத்தி வந்தார் என்று காட்டுவதற்கான ஆவணங்கள் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மாமனார் பெயரில் ஆவணங்கள் இருந்தது, எனது மாமியார் பணம் கொடுப்பார். மேற்கண்டவாறு நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. 2005–லிருந்து வழக்கு தாக்கல் செய்யும் வரை எனது கணவரை நான் நேரில் சென்று பார்க்கவில்லை என்று சொன்னால் அவர் இருக்கும் இடம் எனக்கு தெரியாது, எனது மாமனார் இறப்பதற்கு 10 நாட்களுக்கு முன்பு எனது கணவர் இருக்கும் இடத்தை சொன்னார்கள், அதன்பின்னர் நான் சென்று அவரைப் பார்த்தேன். நான் மேற்கண்ட விவரத்தை எனது பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நானும் எனது கணவரும் பிரிந்த காலத்திற்கு பின்னர் நான் இந்த வழக்கை தாக்கல் செய்த பின்னர் தான் எனது கணவரை பார்த்தேன் என்றால் சரியல்ல, அதற்கு முன்பே பார்த்துள்ளேன். எந்த வருடம், எந்த தேதியில் அவரை பார்த்தேன் என்றால், எனது மகளை கூட்டிச் சென்று பார்த்தேன், மாதம், தேதி ஞாபகம் இல்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்து இடைகால மனுவில் அளித்த சாட்சியத்தில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்த பின்னர் தான் எனது கணவரைப் பார்த்ததாக சொல்லியுள்ளேன் என்றும், தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாலகங்கா சரணாலயத்தில் எனது கணவர் இருந்த போது நான் எந்த காலத்திலும் பணம் கொடுக்கவில்லை என்றால், சரிதான், எனது மாமியார் பணம் செலுத்தினார்.

எனது மாமியார் பணம் செலுத்தியதாக சொல்வது பொய் என்றும், இவ்வழக்கின் 1, 2 பிரதிவாதிகள் தான் பணம் செலுத்தினார்கள் என்றால் சரியல்ல. எனது மாமியார் 2017–ல் இறந்த பின்னர் காப்பகத்திற்கு யார் பணம் செலுத்தினார்கள் என்றால், எனது கணவரின் தங்கை கணவர் பணம் செலுத்தினார். அதற்கான ஆவணங்கள் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கிற்காக பொய்யாக அவ்வாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 8–ல் 2 பாகம் என்று எந்த சட்டத்தின் அடிப்படையில் கோரியுள்ளேன் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, அவரது வாரிசுகள் என்ற அடிப்படையில் பாகம் கோரியுள்ளேன். யார் யாருக்கு எவ்வளவு பாகம் என்றால், எனது மாமியார் இருக்கும் பொழுது அவருக்கு ஒரு பாகம், எனது கணவருக்கு 2 பாகம், இப்ராஹிம் அலிக்கு 2 பாகம், முகமது ரபீக்கிற்கு 2 பாகம், எனது கணவரின் தங்கைக்கு ஒரு பாகம். இஸ்லாமிய சட்டப்படி மனைவிக்கு 8 ல் 1 பாகம் தான் உண்டு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இஸ்லாமிய சட்டப்படி ஆண் வாரிசு இல்லாத சமயத்தில் இறந்த நபருக்கு உயிருடன் உள்ள உடன்பிறந்த சகோதர, சகோதரிகளுக்கு மீதமுள்ள சொத்துக்கள் சென்றடையும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது கணவருக்கு ஆண் வாரிசுகள் கிடையாது என்றால் சரிதான். இஸ்லாமிய சட்டப்படி நான் பிராதில் கூறியுள்ள பங்கு வீகிதம் சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. எனது கணவர் காலமாகிய பின்னர், நானும், எனது மகளும் தான் வாரிசு என்று சொல்லி தாக்கல் செய்துள்ள சீர்திருத்த பிராதும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள பங்கு விகிதமும் தவறானது என்று சொன்னால் சரியல்ல. நான் புகார் கொடுத்தன் அடிப்படையில் வழக்கு பதியப்பட்டு, அருப்புக்கோட்டை, குற்றவியல் நீதிமன்றத்தில் CC.140/2016 என வழக்கு பதியப்பட்டு, வழக்கு நடந்தது என்றும், அதில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றும் சொன்னால் சரிதான். மேற்படி வழக்கானது தற்போது வரை நிலுவையில் உள்ளது என எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கானது 25.04.2024–ல்

தீர்ப்பாகி, அதில் எதிரிகள் விடுதலை ஆகி உள்ளார்கள் என்று சொன்னால், அது பற்றி எனக்கு தெரியாது. எனது மாமனார் அப்துல் ரசாக் அவர்கள் இறக்கும் காலத்தில் அவரது பெயரில் தனிப்பட்ட முறையில் எந்த சொத்தையும் விட்டு வைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் 1 முதல் 15 லக்க சொத்துக்களை 1–ம் பிரதிவாதிக்கும், 16 வது லக்க சொத்தை 2–ம் பிரதிவாதிக்கும் அப்துல் ரசாக் நன்கொடை கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. 1 முதல் 16 லக்க சொத்துக்களில் தபசில் விவரம் முழுமையாக காட்டப்படாமல் தாக்கல் செய்த இந்த வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1 முதல் 15 லக்க சொத்துக்கள் 1–ம் பிரதிவாதி கைவசமும், 16 லக்க சொத்து 2–ம் பிரதிவாதி கைவசமும் நன்கொடை பெற்ற காலத்திலிருந்து இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. 16 வது லக்க சொத்தை பொறுத்து 2–ம் பிரதிவாதி அவரது பெயருக்கு தீர்வை மாற்றி தனித்த முறையில் அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் வழக்கு மூலம் கற்பனை ஆனது என்று சொன்னால் சரியல்ல. சொத்துக்கள் அனுபவம் இல்லாததால், நீதிமன்றக் கட்டணம் தவறுதலாக செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நான், அப்துல்லாவின் சட்டப்படியான மனைவி இல்லை என்ற காரணத்தினால் அவர் உயிருடன் இருந்த காலத்திலோ, அவர் இறந்த பின்போ இந்த வழக்கை நடத்த சட்டப்படி எனக்கு உரிமை கிடையாது என்று சரியல்ல. நான் பொய்யான காரணங்களுடன் தாக்கல் செய்த இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.